**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 128/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.3** |
| Name | : | **வேல்முருகன்** |
| Father's / Husband Name | : | **சாந்தப்பன்** |
| Address | : | **கீழப்பெரம்பலூர், குன்னம் வட்டம்** |
| Age | : | 32/2025 |

**தேதி : 01.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஜெ.சி.பி. ட்ரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எனக்கு தெரியும். எங்கள் ஊரை சேர்ந்தவர். அ.சா.1 ஆனந்தனுக்கு சொந்தமான இருசக்கர வாகனம் கடந்த 16.07.2024ம் தேதி அன்று பெரம்பலூர்அரசு மருத்துவைனயில் நிறுத்தியிருந்தபோது காணாமல் போய்விட்டது. இது சம்மந்தமாக அ.சா.1 17.07.2024 அன்று பெரம்பலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகார் சம்மந்தமாக பெரம்பலூர் போலீஸார் பெரம்பலூர் ் அரசு மருத்துவமனைக்கு வந்து காணாமல் போன இருசக்கர வாகனம் நிறுத்தியிருந்த இடத்தை வரைபடம் வரைந்தார்கள். அதற்காக நானும், கலையரசன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக ஏற்கெனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 எனக்கு மாமா முறை என்றால் சரிதான். பார்வை மகசரில் உள்ள விவரங்களை என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் முடியும். பிரசவ வார்டு அருகில் வண்டி நின்றிருந்தது. வரைபடம் வரைந்த இடத்தில் சுமார் 10, 15 நபர்கள் இருந்திருப்பார்கள். என்னுடைய மாமாவின் இருசக்கர வாகனம் காணவில்லை என்பதால் நான் பெரம்பலூர் ் மருத்துவமனைக்கு வந்தேன். இந்த விவரத்தைதான் நான் போலீஸார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். போலீஸார்காவல் நிலையத்தில் வைத்து வெற்றுதாளில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றாலும், அ.சா.1 ஆனந்தன் எனக்கு உறவினர் என்பதாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.